(8)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
முறையீட்டு மனு எண். 47/பேரூ/முமந/2021

நாள் 12 .07.2021

திரு. R. ஹேமநாதன்,
ராணிப்பேட்டை ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பனப்பாக்கம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி, எண்.26/103 அண்ணாநகர் 3வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. ஹேமநாதன் அவர்களின் 27.05.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 47/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி, எண்.26/103 அண்ணாநகர் 3வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. ஹேமநாதன் என்பவர் பனப்பாக்கம் பேரூராட்சியில் சாலைகளில்/பிரதான சாலைகளில் இருசக்கர வாகனங்கள் அதிவேகமாகச் செல்வதால், முதியவர்கள், குழந்தைகள் பாதுகாப்பு கேள்விக்குரியாக உள்ளது எனவும், வேகமாகச் செல்லும் இருசக்கர வாகனங்களினால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றும், எனவே பனப்பாக்கம் பேரூராட்சியில் நெல்லூர்பேட்டை, குயவீதி, அண்ணாநகர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகிலும் வேகத்தடைகள் அமைத்திட ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பாக பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 07.07.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. பனப்பாக்கம் பேரூராட்சி

செயல் அலுவலர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள அண்ணாநகர் மற்றும் நெல்லூர்பேட்டை பகுதியில் உள்ள தெருக்களில் வேகத்தடைகள் இல்லாததால் இருசக்கர வாகனங்களில் சென்றுவருபவர்களுக்கு விபத்துக்கள் ஏற்படுவதாக தெரிவித்துள்ள இடத்தில் வேகத்தடை அமைக்குமாறு கோரியுள்ளார். அவர் கோரியுள்ளவாறு அண்ணாநகர் மற்றும் நெல்லூர்பேட்டை பகுதிகளில் மூன்று இடங்களில் வேகத்தடை தற்போது அமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. பேரூராட்சிக்குட்பட்ட பகுதியான அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் வேகத்தடை அமைப்பதற்கு பேரூராட்சி மூலம் வழிவகையில்லாததால், மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் வேகத்தடை அமைத்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சாலைப்பாதுகாப்பு ஆய்வுக்கூட்டத்தில் பொருள் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் சமர்ப்பிக்கின்றேன். மேலும், இன்று (07.07.2021) மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையின்போது இது சம்மந்தமானபுகைப்படத்துடன் கூடிய எனது அறிக்கையினையும் சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

3. செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி அவர்களது வாக்குமூலம் மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் நேரடி விசாரணைக்கு ஆஜராகாத நிலையில், இந்நேர்வு சம்மந்தமான அனைத்து ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு, மனுதாரர் கோரிக்கையான பிரதான சாலைகளில் வேகத்தடை அமைப்பது தொடர்பான கோரிக்கை நிறைவேற்றப்பட்டுவிட்டதால், செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி அவர்களின் அறிக்கையை ஏற்று இப்புகார் மனு மீதான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்கலாம் என முடிவுசெய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு ஜுலை திங்கள், —12 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை-600 032 வாய்மையே வெல்லும்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13.7.21

பெறுநர்

1. R. ஹேமநாதன்,
   எண்.26/103, அண்ணாநகர் 3வது தெரு,
   பனப்பாக்கம் பேரூராட்சி, ராணிப்பேட்டை மாவட்டம்
2. செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி, ராணிப்பேட்டை மாவட்டம்
3. முறைமன்ற நடுவரின் நேர்முக உதவியாளர்
4. உதிரி/இ.கோ